**இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1996 இன் 26 ஆம் இலக்க புத்தசிராவக்க பிக்கு பல்கலைக்கழக சட்டத்தினதும் மற்றும் 2012 இன் 15 ஆம் இலக்க இலங்கை பிக்கு பல்கலைக்கழக (திருத்தப்பட்ட) சட்டத்தின் 46 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமானக் கோவை.<br>நிதிப் பிரமாணம் 571 | 2017 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 114,162 கூட்டுத் தொகையான 09 கேள்வி வைப்புக்கள் மற்றும் ரூபா 610,729 கூட்டுத் தொகையான 07 ஒப்பந்த நிறுத்தி வைத்தல் வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற பிணை வைப்பை 02 வருடங்களை விஞ்சியதன் பின்னர் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 89,004,001 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 55,048,393 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 39,955,608 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஆளனி வேதனங்கள் மற்றும் ஓய்வூதிய நலன்கள் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டில் நடைமுறை விகிதம் 1:1.25 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது 1:0.74 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்களில் முற்பணம் மற்றும் வைப்புக்களின் பெறுமதி ரூபா 15 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களில் கடன் கொடுத்தோர் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வெளிவாரி பாடநெறிக் கட்டணம் ரூபா 13 மில்லியனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாடப் பரிந்துரையின் பிரகாரம் பாடநெறி ஒன்றிற்காக 45 விரிவுரை மணித்தியாலங்களை மேவுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க | ஏற்றுக்கொள்கின்றோம். மாணவர்கள் விரிவுரைகளுக்கு சமூகம் அளிக்காமை, விடுமுறை | பாடநெறியின் தரத்தன்மையைப் பேணிச் செல்வதற்கு பாட பரிந்துரைகள் |

| | | |
|---|---|---|
| வேண்டிய போதிலும், 4 கற்கைப் பிரிவுகளின் 33 பாடங்களை பரீட்சித்த போது 2017/2018 கல்வி ஆண்டில் II ஆம் அரையாண்டில் பாடநெறி விடயங்களை மேவுகை செய்யாத விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 13 சதவீதம் முதல் 29 சதவீதம் வரையிலான வீச்சில் இருந்தமையின் காரணமாக பாடநெறியின் தரத்தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | தினத்தில் நடாத்தப்பட்டமை போன்றன விரிவுரை நடாத்தப்படாமைக்கான காரணங்கள் ஆகும். | மேவுகை செய்ய வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல வருடங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 409,800 கூட்டுத்தொகையான 04 நானாவித கடன்கொடுத்தோர் மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருட காலங்களை விஞ்சியதன் பின்னர் உரிய நபரிடம் விசாரணை செய்து அரசாங்கம் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்ட காலமாக காணப்படுகின்ற கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | சேவையிலிருந்து விலக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் மற்றும் சேவையிலிருந்து விலகிச் சென்ற ஒரு விரிவுரையாளர் என்போரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 145,461 கூட்டுத்தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவையிலிருந்து அகற்றப்பட்ட உத்தியோகத்தரினால் நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது. சேமலாப நிதியத்தை விடுவிக்கும் போது இந்த கடன் பணத்தை அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சேவையிலிருந்து விலகிச் சென்ற பிக்கு விரிவுரையாளருக்கு ஊழியர் சேமலாப நிதியத்தை விடுவிக்கும் போது இந்த கடன் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர் சேமலாப நிதியினை விடுவிக்கும் போது கடன் மீதிகள தீர்த்து வைக்கப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வள முகாமைத்துவம் தொடர்பான தகவல் தொழில்நுட்ப முறைமை (ERP) ஸ்தாபிப்பதற்காக ஒப்பந்தகாரரை தெரிவுசெய்யும் போது கேள்வி ஆவணங்களின் பொது நிபந்தனைகளின் கீழ் தேர்ச்சியடைந்த கேள்வியாளர் மென்பொருள் அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பாக இறுதி மூன்று ஆண்டுகளின் வருடாந்த புரள்வு ரூபா 50 மில்லியனை விஞ்சியருக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்ட போதிலும், அதனை கவனத்தில் கொள்ளாது ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. ஏற்றுக்கொள்ளல் கடிதத்தின் பிரகாரம் 06 மாதங்களில் முறைமை வெற்றிகரமாக செயற்படு நிலைக்கு கொண்டுவர வேண்டியிருந்த போதிலும், அது 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதும், 2020 யூலை 31 ஆம் திகதி வரையும் முறைமையை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அதற்காக ரூபா 4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இலங்கையின் அரசாங்க பல்கலைக்கழங்களுக்கிடையிலான ஒட்டுமொத்தமான செயற்பாடுகளுக்காகவும் தயாரிக்கப்படுகின்ற முதலாவது ERP முறைமையாகும். அதன் பிரகாரம் பல்கலைக்கழகம் ஒன்றில் காணப்படுகின்ற சிக்கல்மிக்க செயற்பாடுகளை ஆய்வு செய்து இந்த செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டமையினால் சில சில பிரச்சினையான நிலமைகள் ஏற்பட்டமையினால் இதன் உடன்படிக்கையை கைச்சாத்திடுதல் தொடர்ச்சியாக தாமதமடைந்திருந்தது. எவ்வாறாயினும், கேள்வி ஆவணங்களின் நிபந்தனைகளின் பிரகாரம் இதற்காக உரித்தான ஆரம்ப ஆவணங்களான செயலாற்றல் பிணை முறி உரியவாறு பெறப்பட்டிருந்தமையினால் தாமதமின்றி உரிய உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் உரிய பணிகளுக்காக உடனடியாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு செயலாற்றல் பிணைமுறி எதிர்பார்த்த காலம் வரை நீடிக்கப்பட்டு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டு மாணவர்களுக்காக நிர்மாணிக்கப்படுகின்ற மூன்று மாடி விடுதி கட்டிடத்திற்குரிய திட்டத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே 1,031 சதுர மீற்றர் நிலம் மற்றும் சுவர்களை டைல் பிடிக்கும் போது இணங்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்காததாக டைல் பதிக்கப்பட்ட போதிலும், | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக உரிய ஆவணங்கள் தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. Employer’s Requirement இன் கீழ் குளியல் அறை சுவரிற்காக Homogeneous Heavy Type Lanka Tile or Equalent டைல் | உரிய குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களின் அங்கீகாரத்தை பெற வேண்டும். கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நியமத்துடனான டைல் பதிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பொறியியலாளரின் உறுதிப்படுத்தலின் அடிப்படையில் அதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 95 சதவீதம் அதாவது ரூபா 9,567,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வகையொன்று கோரப்பட்டிருந்தது. எனினும், லங்கா டைல்களில் அந்த டைல் வகை உற்பத்தி செய்யப்படாதிருந்தமையால் பல்கலைக்கழகத்தினால் wall tile ஒன்றான 600mm x 300 mm அளவில் 521 - E வகையின் Rocel Full Body Homogeneous வகையின் டைல் பதிக்கப்பட்டிருந்தது. Rocel நிறுவனத்தின் மூலம் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதிய கடிதத்தின் மூலமும் அந்த டைல் Rocel Full Body Homogeneous வகையாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது | |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினரில் 08 பதவிகள் மற்றும் கல்விசாரா பதவி அணியில் 10 பதவிகள் என்பன 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வெற்றிடமாக காணப்பட்டது. | இந்த பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஆவணங்களின் பிரகாரம் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தாமதமின்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரியதாக பல்கலைக்கழகத்தினால் தமது விடயப்பரப்பிற்கு எடுக்கப்படுகின்ற பணிகள் தொடர்பாக போதியளவான கவனம் | இந்த பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை கவனத்தில் கொள்ளும் போது நிலைபேறான அபிவிருத்தி மற்றும் இலக்குகளை பெற்றுக் கொள்ளும் வகையில் நேரடியான பங்களிப்பு | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் தமது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அதற்குரிய செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை மற்றும் வருடாந்த பாதீட்டில் போதியளவான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமை என்பவற்றை இனங்காண முடியாதிருந்தது.

செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், எதிர்காலத்தின் போது 2017.08.14 ஆம் திகதிய என்.பீ/எஸ்.சீ.பீ.17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இணங்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.